From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 164 /2021

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Loganathan | Father/Husband Name | : Ramaiah |
| Caste | : | Calling | : Advocate |
| Religion | : | Age | : |
| Date | : 02.12.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் திருமோகூரில் வசிக்கிறேன். வழக்கறிஞராக பணிபுரிகிறேன். நான் ஆஜா் எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து பார்த்திருக்கிறேன். கடந்த 24.07.20ம் தேதி மாலை 07 முதுல் 07.30 மணியளவில் எங்கள் வீட்டின் அருகே குடியிருக்கும் சங்கீதா என்பவா் போன்மூலம் எங்கள் வீட்டில் அருகில் உள்ள முதல் வீட்டில் கதவு உடைக்கப்பட்டு இருப்பதாகவும், உங்கள் வீட்டில் எப்படி இருக்கிறது என்று என்னிடம் கேட்டார். நான் அவரிடம் எங்கள் சொந்த ஊரில் இருப்பதாக சொல்லிவிட்டு எங்கள் வீட்டின் எதிரோ வசிக்கும் பொன்பாண்டி என்பவரிடம் போன்மூலம் எங்கள் வீட்டிற்கு சென்று பார்த்து சொல்லும்படி கூறினேன். மேற்படி சம்பவத்திற்கு முன்பாக 13.06.20ம் தேதி நான் என் குடும்பத்தினருடன் கொரோனா லாக்டவுன் காரணமாக நாங்கள் எங்ள் சொந்த ஊருக்கு சென்றுவிட்டோம். 29.06.20ம் தேதி என் அக்கா காரை சா்வீஸ் செய்வதற்காக நான் திருமோகூர் வந்திருந்தபோது நான் என் வீட்டிற்கு சென்று செடிகளுக்கு தண்ணீா் விட்டுவிட்டு மாலை 4 மணிக்கு மீண்டும் ஊருக்கு சென்றுவிட்டேன். இந்நிலையில் மேற்படி 24.07.20ம் தேதி என் வீட்டிற்கு சென்று பார்த்த பொன்பாண்டி அவா்கள் என் வீட்டில் முன்கதவு உடைக்கப்பட்டு வீட்டிற்குள் கதவு மற்றும் பீரோ உடைக்கப்பட்டிருந்ததாகவும் பொருட்கள் சிதறி கிடப்பதாகவும் என்னிடம் கூறிவிட்டு அவசர போலீஸ் எண். 100-க்கு போன்பன்னி தகவல் சொல்லியிருந்தார். உடனே நான் சுமார் 8 மணியளவில் எங்கள் ஊரிலிருந்த கிளம்பி திருமோகூா் வீட்டிற்கு வந்து பார்த்தபோது எண் 100லிருந்து வந்திருந்த போலீசார் அங்கிருந்தார்கள். அப்பொழுது போலீசார் கைரேகை பதிவு நிபுணா்களுக்கு தகவல் சொல்லியருப்பதால் எங்களை

எந்த பொருட்களயையும் தொடுவதற்கு அனுமதிக்கவில்லை. கைரேகை நிபுணா்கள் வந்து பதிவு எடுத்துக்கொண்டு சுமார் 2 மணியளவில் சென்றார்கள். பின்னர் நான் வீட்டிலிருந்த பொருட்களை பார்த்தபோது பின்வரும் பொருட்களை காணவில்லை. 1) 2 கிராம் எடையுள்ள குழந்தைகள் அணியும் மோதிரம் -10, 2) குழந்தைகள் அணியும் கைசெயின் 1 பவுன் உடையது- 4, 3) குழந்தைகள் அணியும் 1 பவுன் எடையுள்ள கழுத்துச்செயின் - 4, 4) 2 பவுன் எடையுள்ள டாலர் செயின் ஒன்று. 5) முக்கால் வீதம் எடையுள்ள 2 ஜோடி தோடு. 6) 9 வைரக்கல் பதித்த ஒரு ஜோடி தோடு. 7) ரொக்கம் ரூ. 50 ஆயிரம், 8) நிக்கான் கேமரா ஒன்று ஆகியவற்றை காணவில்லை. இரவு 2 மணிக்குமேல் ஆகியவிட்டதால் பொருட்களை சரிபார்த்தபின்பு மறுநாள் காலையில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். 09.08.21ம் தேதி காவல் நிலையத்திலிருந்து போன்மூலம் அழைப்பு வந்ததன்பேரில் காவல் நிலையம் சென்று பார்த்தபோது எங்கள் வீட்டில் திருடுபோன நகைகளை உருக்கிவிட்டதாக அந்த பொருட்களை ஒப்படைத்த நபர்களை போலீசார் அடையாளம் காண்பித்தார்கள். அவர்கள் யார் என்று காண்பித்தார்கள். எங்களது நகை உருக்கி கட்டியாக எங்களிடம் காட்டப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள உருக்கிய தங்கத்தைதான் போலீசார் கைப்பற்றியதாக எங்களிடம் காண்பித்து 01.09.21ம் தேதி நீதிமன்றத்தல் மனு செய்து பெற்றுக்கொண்டேன். அதன் எடை 111.780 மில்லி கிராம் ஆகும். அந்த புகைப்படம் சா.பொ.1, அதனுடன் கூடிய சி.டி. சா.பொ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை: (1 மற்றும் 2 எதிரிகளுக்காக)

பொன்பாண்டியன் என் உறவினர் என்றால் இல்லை. அவர் எனக்கு எத்தனை ஆண்டுகள் பழக்கம் என்றால் அவர் எனக்கு டைப்பிஸ்ட் என்பதால் பழக்கம் சம்பவத்தை பற்றி என்னிடம் சொல்லாமல் நேரடியாக 100-க் போன் செய்தாரா என்றால் என்னிடம் சொல்லிவிட்டு செய்தார். நான் வருவதற்கு முன்பாக போலீசார் கைரேகை நிபுணர்க்ள வந்துவிட்டனர் என்றால் போலீசார் வந்துவிட்டனர், கைரேகை நிபுணருக்கு தகவல ் சொல்லப்பட்டிருந்தது. போலீசா் வந்த பின்புதான் நான் சம்பவ இடம் வந்தேன் என்றால் சரிதான். அதன்பின்புதான நான் வீட்டிற்குள் சென்று என்ன நடந்தது என்று பார்த்தேன் என்றால் சரிதான். எதிரிகளை காவல் நிலையத்தில் போலீசார் காட்டியபின்புதான் எதிரியும் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் காட்டப்பட்ட தங்க கட்டி என்னுடைய நகைகளை உருக்கியதால் கிடைத்த

தங்க கட்டி என்று எனக்கு தெரியாது என்றால் போலீசார் சொல்லித்தான் தெரியும், மறற்படி தெரியாது. எதிரிகள் கொடுத்த பொருட்களிலிருந்து உருக்கிய தங்க கட்டிதான் அது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொண்ட தங்கத்தை தவிர வேறு எந்த நகைகளும் சம்மந்தப்படவில்லை என்றால் சம்மந்தப்பட்டுள்ளது, வைரத்தோடு உள்ளது. காவல் நிலையத்தில் போலீசார் என்னுடைய வைரத்தோடுகளை எதிரிகள் கவரிங் தோடு என்று தூக்கி எறிந்த விவரத்தை என்னிடம் சொன்னார்களா என்றால் சொன்னார்கள். எனவே 111.75 கிராம் நகையில் அந்த வைரத்தோடு அடங்காது என்றால் சரிதான். திருட்டுபோன நகைகளுக்கு பதிலாக ஏதோ ஒரு வகையில் நகை கிடைத்தால் போதும் என்று இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாத எதிரிகளை இவர்கள்தான் எதிரிக்ள என்று போலீசார் காட்டியதாகசொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் காட்டியதன் அடிப்படையில்தான் அவர்கள் எதிரிகளாக இருக்கிறார்கள், மற்றபடி அவர்களுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை: (3-வது எதிரிக்காக)

கைரேகை நிபுணர்கள் என் வீட்டிலிருந்த எடுத்த கைரேகைக்கும் எதாவது எதிரிகளின் கைரேகைக்கும் சம்மந்தம் உள்ளதாக என்னிடம் எப்பொழுதாவது போலீசா தெரிவித்தனரா என்றால் நான் கேட்கவில்லை, என்னிடம் சொல்லவுமில்லை. மோப்பநாய் மூலம் துப்புதுளங்க முயற்சித்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்து ஒரு வருடம் ஆன பின்பும் நகைகளை கண்டுபிடிக்க முடியாததால் நான் காவல் உயர் அதிகாரிகளிடம் புகார் செய்தேனாஎன்றால் இல்லை. காவல் ஆய்வாளரை சந்தித்து அடிக்கடி கேட்பேன் என்றால் சரிதான். 9.08.21ம் தேதி எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்திருப்பது ஆய்வாளா் சொல்லித்தான் தொியும் என்றால் சரிதான். 24.07.20ல் சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேன், ஆனால் 02.08.20ல் சம்பவம் நடந்துள்ளத என்றாலும், எதிரிக்கும் இந்த்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை ன்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 164 /2021

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Subashini | Father/Husband Name | : Loganathan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 02.12.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் திருமோகூரில் வசிக்கிறேன். வீட்டுக்குடித்தனம் செய்கிறேன். அ.சா.1 என் கணவர். ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. கடந்த 24.07.20ம் தேதி நான் சிவகங்கை மாவட்டம் திருமணவயல் என்ற எங்கள் வீட்டில் இருந்தபோது திருமோகூரில் எங்கள் வீட்டிற்கு அருகில் வசிக்கும் சங்கீதா என்பவர் போன் செய்து எங்கள் வீட்டின் பக்கத்து வீட்டில் திருடுபோயிருப்பதாகவும், அதுபற்றி உங்களுக்கு எதுவும் தெரியுமா என்று கேட்டார்கள். பின்னர் என் கணவர் பொன்பாண்டியன் என்பவருக்கு போன் செய்து எங்கள் வீட்டிற்கு சென்று பார்த்துவரசொன்னார். பின்னர் எங்கள் வீட்டிற்கு சென்று பார்த்துவிட்டு திரு.பொன்பாண்டியன் அவர்கள் எங்கள் வீட்டின் முன்கதவு, உள் கதவுகள் மற்றும் பீரோ உடைக்கப்பட்டு பொருட்கள் சிதறிக்கிடப்பதாக சொன்னார். உடனே நாங்கள் கிளம்பி வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீட்டின் கதவுகள் உடைக்கப்பட்டு திறந்துகிடந்தது. பொருட்கள் எல்லாம் சிதறி கிடந்தது. இரவு நேரமாகிவிட்டதால் மறுநாள் காவல் நிலையம் சென்று என் கணவர் புகார் கொடுத்தார். மொத்தம் 14 பவுன் எடையுள்ள, 1) 2 கிராம் எடையுள்ள குழந்தைகள் அணியும் மோதிரம் -10, 2) குழந்தைகள் அணியும் கைசெயின் 1 பவுன் உடையது- 4, 3) குழந்தைகள் அணியும் 1 பவுன் எடையுள்ள கழுத்துச்செயின் - 4, 4) 2 பவுன் எடையுள்ள டாலர் செயின் ஒன்று. 5) முக்கால் வீதம் எடையுள்ள 2 ஜோடி தோடு. 6) 9 வைரக்கல் பதித்த ஒரு ஜோடி தோடு. 7) ரொக்கம் ரூ. 50 ஆயிரம், 8) நிக்கான் கேமரா ஒன்று ஆகியவற்றை காணவில்லை. பின்னர் 09.08.21ம் தேதி நகைகள் உருக்கப்பட்டு ஒரு தங்க கட்டியாக கைப்பற்றியுள்ளதாக போலீசார் தகவல்

சொன்னதன்பேரில் என் கணவா் காவல் நிலையம் சென்று பாா்த்துவிட்டு பின்னா் 01.09.21ம் தேதி நீதிமன்றத்தில் மனுச்செய்து பெற்றுச்சென்றாா். போலீசாா் என்னை விசாரித்தனா்.

குறுக்கு விசாரணை:

வழக்கு சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்பதும், யாா் அதை செய்தது என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான், நேரடியாக தெரியாது. இந்த எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்நம்தமில்லை என்றால் சரியல்ல.

From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 164 /2021

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Karakathiah | Father/Husband Name | : Ponnaiah |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 02.12.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் டி.பெருங்குடி, திருமோகூரில் வசிக்கிறேன். நான் வழக்கறிஞர் எழுத்தராக பணி செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. கடந்த 24.07.20ம் தேதி மாலை 7மணிக்கு அ.சா.1 எனக்கு போன் செய்து பக்கத்து வீட்டில் திருடுபோயிருப்பதாக சங்கீதா என்பவர் சொன்னதாகவும், அதன்பேரில் அவரது வீட்டிற்கு சென்று பார்த்து வருமாறும் கூறியதன்பேரில் நான் சென்று பார்த்தபோது மாடியிலுள்ள அவர் வீட்டில் இரண்டு கேட்டும் உடைக்கப்பட்டிருந்தது, அதை பார்த்து எனக்கு பதட்டமாக இருந்தது. உடனே உள்ளே செல்லாமல் அ.சா.1க்கு போன்மூலம் தகவல் சொன்னேன். பின்னர் அவர் ஊரிலிருந்து அவர் வந்துவிடுவதாகவும் அதற்குள் எண்.100-க்கு தகவல் சொல்லுமாறும் மற்றும் அருகிலுள்ள அவரது நண்பர்களுக்கும் தகவல் சொல்லுமாறும் சொன்னார். அதன்பேரில் நான் 100-க்கு தகவல் சொல்லி போலீசார் மற்றும் ஆய்வாளர் மற்றும் அ.சா.1-ன் நண்பர்களும் அங்கு வந்துவிட்டார்கள். பின்னர் அ.சா.1 இரவு 10 மணிக்குமேல் வந்தபிறகு அவருடன் அவரது வீட்டிற்குள் சென்று பார்த்தபோது வீடே அலங்கோலமாக இருந்தது. போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

இந்த சம்பவம் யாரால் உடைக்கப்பட்டது, திருடப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். திருமாள் நகரில் முக்கிய பிரமுகர்கள் நிறையபேர் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். பொதுவாக அந்த பகுதியில் சி.சி.டி.வி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை. திருமாள் நகரில் உள்ள வீடுகளில் சி.சி.டி.வி. கேமராக்கள்

பொருத்தப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரிந்தவகையில் இல்லை. அந்த பகுதிக்கான நலச்சங்கம் உள்ளதா என்றால் இல்லை. அந்த பகுதி முக்கியமான பகுதி என்பதால் சி.சி.டி.வி. கேமராக்கள் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 164 /2021

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Vignesh | Father/Husband Name | : Selvam |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 02.12.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் ஒத்தக்கடை நரசிங்கத்தில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 09.08.21ம் தேதி காலை 10.30 முதல் 11 மணியளவில் நானும் என் அண்ணன் ராஜா என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது காளிகாப்பான் விலக்கு அருகே போலீசார் 1 மற்றும் 2 வது எதிரிகளை பிடித்து வைத்திருந்தார்கள். அப்பொழுது போலீசார் என்னிடம் அந்த இரண்டு நபர்களையும் சந்தேகத்தின்பேரில் பிடித்திருப்பதாகவும், சாட்சியாக வருமாறு அழைத்ததன்பேரில் முதல் 2 எதிரிகளுடன் போலீசார்களும் நாங்கள் இருவரும் சென்றோம். வௌவால்தோட்டத்தில் உள்ள மீனாட்சி நகரிலுள்ள எதிரியின் வீட்டில் வைத்து எதிரிகள் தங்க கட்டியை போலீசாரிடம் எடுத்து கொடுத்தார்கள். அதில் 3 தங்க கட்டிகள் இருந்தது. பின்னர் காவல் நிலையம் சென்று போலீசார் எடை போட்டு பார்த்து 2 பவுன், 14 பவுன் மற்றும் 4 1/2 பவுன் எடையுடையதாக போலீசார் கூறினார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்டபகுதி அ.சா.ஆ.2, அத்தாட்சி அ.சா.ஆ.3 ஆகும். பிறகு போலீசார் மற்றொரு நபரை பற்றி எதிரிகள் கூறுவதாகவும் அவரையும் விசாரிக்கவேண்டும் சொல்லி ஜெய்ஹிந்புரம் அழைத்துச்சென்றார்கள். அங்கு 3ம் எதிரி அவரது வீட்டிலிருந்து ஆஜர் செய்த 5 பவுன் எடையுள்ள செயினை எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பறிறனார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் விவசாய அடையாள அட்டை வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் இதே நீதிமன்றத்தில் வேறு வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இல்லை. நான் ஒத்தக்கடை காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்படி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒத்தக்கடை எஸ்.எஸ்.மஹால் அருகிலுள்ள சுந்தரி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. சுந்தரி என்பவர் 1 மற்றும் 2வது எதிரிகளுக்கு இரண்டரை லட்சம் ரூபாய் பணம் தரவேண்டி உள்ளது என்றாலும் அதனை கேட்க சென்ற மேற்படி எதிரிகள்மீது சுந்தரி ஒத்தக்கடை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் சுந்தரியே யார் என்று தெரியாது. எதிரிகள் சுந்தரி என்பவர் வீட்டில்தான் வாடகைக்கு குடியிருக்கிறார்கள் என்றால் தெரியாது. சுந்தரியின் தூண்டதலினால்தான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சுந்தரியை எனக்கு தெரியாது. ஜெய்ஹிந்த்புரத்தில் 3-வது எதிரியின் வீடு மெயின்ரோட்டில் உள்ளதா உள்பகுதியில் உள்ளதா என்றால் உள்பகுதிக்குதான் அழைத்து சென்றனர். அவர் வீட்டு முன்பாகவரை ஜீப்பில் சென்றோம் என்றால் சுமோவில் சென்றோம். ஜீப் வீட்டு வாசலில் நின்றது நான் ஜீப்பில் இருந்தேன் என்றால் நான்இறங்கி வாசலில் நின்றேன். கோபிக்கண்ணனின் வீட்டு வாசல் எந்த திசை நோக்கி இருந்தது என்றால் தெரியாது. அந்த வீட்டில் எந்த கலர் பெயின்ட் அடிக்கப்பட்டிருந்தது என்றால் தெரியாது. 09ம் தேதி காவல் நிலையத்திற்கு நான் சென்றபோது எதிரிகளை பார்த்தேன் என்றால் வாகனத்தணிக்கையில்தான் பார்த்தேன். ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சியும் காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் கையெழுத்தை என் பேனாவில்செய்தேனா, போலீசாரிடம் வாங்கி செய்தேனா என்றால் போலீசாரிடம் வாங்கி செய்தேன். நான் அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்யும்பொழுது ஆய்வாளர், சார்பு ஆய்வாளர் காவல் நிலையதில் இருந்தர்களா என்றால் இருந்தார்கள். நான் போலீசார் சொல்லிக்கொடுத்தபடியும், சுந்தரி என்பவருக்கு ஆதரவாக இவர்கள்மீது வண்மம்கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் எதிரிகள் ஒப்படைத்த தங்க கட்டிகள் எந்த நகையிலிருந்து உருக்கியது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது, கட்டியை ஒப்படைத்தது மட்டும்தான் தெரியும் என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 164 /2021

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Raja | Father/Husband Name | : Subramanian |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 02.12.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் ஒத்தக்கடை நரசிங்கத்தில் வசிக்கிறேன். நான் ஆட்டோ மற்றும் வேன் ஓட்டுநராக வேலை செய்கிறேன். ஆஜா் எதிரிகளை தெரியும். கடந்த 09.08.21ம் தேதி காலை 11.00 முதல் 11 மணியளவில் ஒத்தக்கடையிலிருந்து திருமோகூா் செல்லும் வழியில் காளிகாப்பான் என்ற இடத்தில் நானும் என் சித்தப்பா மகனும் சென்றுகொண்டிருந்தபோது வாகன சோதனையிலிருந்த போலீசாா் முதல் 2 எதிரிகளையும் பிடித்து வைத்திருந்தாா்கள். இருசக்கர வாகனத்தில் சென்ற எங்களயையும் நிறுத்தி வாகன சோதனை செய்தாா்கள். போலீசாா் எங்களிடம் மேற்படி எதிரிகள் இருவரும் திருட்டு வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதாக தெரியவருவதாகவும், எங்களை சாட்சிகளாக அழைத்ததன்பேரில் எதிரிகள் மற்றும் போலீசாருடன் மீனாட்சி நகரிலுள்ள எதிரிகளின் வீட்டிற்கு சென்றோம். அங்கு எதிரிகள் அவா்களது வீட்லிருந்து 3 தங்க கட்டிகளை எடுத்து வந்தாா்கள். பின்னா் காவல் நிலையம் சென்று போலீசாா் தங்க கட்டிகளை எடை பாா்த்து இரண்டரை, நான்கு மற்றும் பதினான்கு எடை இருந்ததாக கூறினாா்கள். பிறகு மேலும் 3-வது எதிரி வீடான ஜெய்ஹிந்புரத்திற்கு அழைத்துச்சென்றாா்கள். அங்கு அவரது வீட்டிலிருந்த 5 பவுன் எடையுள்ள மாலை போன்ற ஒரு கவா்னா்மாலையை எடுத்து வந்தாா்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி, ஒப்புதல் வாக்கு மூலங்களில் உள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். போலீசாா் என்னை விசாரித்தனா்.

குறுக்கு விசாரணை:

காளிகாப்பான் விலக்கில் இருந்து எதிரிகளை போலீசாா் என்ன சொல்லி அழைத்துச்சென்றாா்கள் என்றால் ஏற்கனவே திருட்டு வழக்கில் ஈடுபட்டவா்கள் என்று சொல்லி அழைத்துச்சென்றாா்கள். 1, 2 எதிரிகள்

காவல் நிலையத்தில் தங்க கட்டிகளை ஒப்படைத்தது மட்டும்தான் எனக்கு தெரியும், அது எங்கிருந்து எப்படி வந்தது தெரியாது என்றால் சரிதான். ஜெய்ஹிந்த்புரதத்தில் 3-வது எதிரியின் வீடு எங்கிருக்கிறது என்று தெரியுமா என்றால் நான் மெயின் ரோட்டில் நின்றுகொண்டிருந்தேன் வாகனத்தில் அழைதிது கொண்டு சென்றார்கள் அதனால் தெரியாது. 3-வது எதிரி தங்க மாலையை ஒப்படைத்தது மட்டும்தான் தெரியும் அது எங்கிருந்து எப்படி வந்தது என்று விளக்கம் தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் போலீசார் கொடுத்த பேப்பரில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் நான் படித்து பார்த்து செய்தேன். பொதுவாக ஆட்டோ வேன் டிரைவர்களுக்கு போலீசாரின் ஒத்தாசை தேவை என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தின் விவரம் எனக்கு தெரியாது என்றால் எதிரிகள் உள்ளே இருந்து கொடுத்துக்கொண்டிருந்தாகள் நான் வெளியே இருந்தேன் அதனால் எனக்கு தெரியாது. போலீசார்தயவு தேவை என்பதால் நான் பொய்யாக யசாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.4ம் நானும் உறவினர்கள் என்றால் சரிதான். விக்னேஷ் எனக்கு உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஜெய்ஹிந்த்புரம் போனபோது நானும் விக்னேசும் மெயின்ரோட்டில் நின்றுகொண்டிருந்தோம் என்றால் சரிதான்.